பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
27 06 2025 **FRIDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியை பிடிப்பது உறுதி என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு தமிழகத்திற்கு எந்த அநியாயமும் செய்யாது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. பூரி ஜெகந்நாதர் ஆலய ரத யாத்திரையை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

4. தமிழகத்தில் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு வரும் 14ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5. அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹரிகரன் - ரூபன்குமார் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<<<>>>>>>>>>

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியை பிடிப்பது உறுதி என்று பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், திமுக அரசின் தோல்விகளையும், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சாதனைகளையும் மக்களிடம் எடுத்துக் கூறுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற அணுகுமுறையின் அடிப்படையிலேயே 20-க்கு மேற்பட்ட மாநிலங்களில் பிஜேபி ஆட்சியமைத்துள்ளதாகவும், அதன் அடிப்படையிலேயே தமிழகத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தை வளமான மாநிலமாக மாற்றுவதற்கோ, தமிழ்மொழி மற்றும் கலாச்சாரத்திற்கோ பிஜேபி எதிரானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் தமிழகத்திற்கு எந்தவிதமான அநீதியும் ஏற்படாது என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

ஜப்பான் பன்னாட்டு அமைப்பின் நிதியுதவி பெறுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகவே மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டதாகவும், அடுத்த ஆண்டுக்குள் இந்த மருத்துவமனை செயல்பாட்டிற்கு வரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கீழடி நாகரிகம், இந்தியா முழுவதற்கும் பெருமை அளிக்கும் விஷயம் என்றும் இதனை உலகம் ஏற்றுக் கொள்வதற்கு சர்வதேச தரத்திலான ஆதாரங்கள் அவசியம் என்றும் திரு. அமித் ஷா விளக்கமளித்துள்ளார்.

கட்சத்தீவை திரும்பப் பெறும் விவகாரத்தில் சர்வதேச நடைமுறைகளின் அடிப்படையில் என்னென்ன செய்ய முடியுமோ அதை செய்வது தான் மத்திய அரசின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திமுக ஆட்சியில் போதைப்பொருள், மதுபானம் மற்றும் மணல் கொள்ளை அதிகரித்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ள உள்துறை அமைச்சர், போதைப்பொருள் விவகாரத்தில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்ய, தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு தமிழகத்திற்கு எந்த அநியாயமும் செய்யாது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள சிறப்பு நேர்காணலை டாக்டர் எல். முருகன் தமது சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>>>

சீனாவுடனான எல்லைப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்கச் சென்ற மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இந்தக் கூட்டத்தினிடையே, சீன பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் **Dong Jun**-ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, 2020ஆம் ஆண்டு இருநாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட **Gulwan** மோதலுக்குப் பிறகு, இருதரப்பு உறவில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டை அகற்ற வேண்டும் என்று திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

எல்லைப்பகுதியில் படை விலக்கலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் வாயிலாக அமைதி நிலவச் செய்ய வேண்டும் என்றும் சீன அமைச்சரிடம் தெரிவித்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

ஆசியாவிலும், உலக அளவிலும் நிலைத்தன்மையை ஏற்படுத்த இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் பயனளிக்கத்தக்க வகையில் இந்தியா – சீனா நட்புறவை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்திருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**<<<<<<<<>>>>>>>>**

பொதுத்துறை வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இன்று ஆய்வு செய்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி, நிதிச்சேவைகள் துறை செயலாளர் திரு. எம். நாகராஜூ, பொதுத்துறை வங்கிகளின் நிர்வாக இயக்குநர்கள் மற்றும் தலைமைச்செயலதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**<<<<<<<<>>>>>>>>**

**QUAD** அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம், வாஷிங்டனில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெறும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அமெரிக்க வெளியுறவுத்துறை துணை செய்தி தொடர்பாளர் திரு. **Tommy Pigott,** இந்தக் கூட்டத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்க்கோ ரூபியோ மற்றும் இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் பங்கேற்கவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

**<<<<<<<<>>>>>>>>**

உலக பிரசித்தி பெற்ற பூரி ஜெகந்நாதர் ஆலய ரத யாத்திரை இன்று தொடங்கியது.

ஜெகந்நாதர், பாலபத்ரா மற்றும் சுபத்ராதேவி ஆகியோர் மூன்று தேர்களில் எழுந்தருளியுள்ள நிலையில், லட்சக்கணக்கான பக்தர்கள் தேரை இழுத்து வருகின்றனர்.

இதையொட்டி, தலைவர்கள் பலர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், தேர்களில் வீற்றிருக்கும் தெய்வங்களை தரிசிப்பதன் மூலம், பக்தர்கள் ஆன்மிக அனுபவத்தை உணர முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இந்த புனித திருவிழா, மக்களுக்கு மகிழ்ச்சி, வளம், சிறப்பான எதிர்காலம், உடல் ஆரோக்கியத்தை வழங்குவதாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டோரும் இந்நாளையொட்டி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<<<<>>>>>>>>

ரயில் கட்டண உயர்வு மக்களை பாதிக்காத வகையில், மேற்கொள்ளப்படும் என்று ரயில்வே இணையமைச்சர் திரு. சோமன்னா தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பரந்தூர் விமான நிலையம் அமையவுள்ள பகுதியில், ரயில் நிலையம் அமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக கூறினார்.

முன்னதாக, அவர் காஞ்சிபுரம் புதிய ரயில் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, ரயில் நிலையத்தை ஒட்டிய இந்திரா நகர் பகுதியில் சுரங்கப் பாதை அமைத்துத் தர வேண்டும் என அப்பகுதி மக்கள் அமைச்சரிடம் கோரிக்கை வைத்தனர்.

இதுகுறித்து பரிசீலனை செய்து, சுரங்கப்பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. சோமன்னா உறுதியளித்தார்.

<<<<<<<<>>>>>>>>

தமிழகத்தில் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு வரும் 14ஆம் தேதி தொடங்கும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று பொறியியல் கலந்தாய்வுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஆண்டு 145 மாணவர்கள் 200க்கு 200 மதிப்பெண் பெற்றுள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் – கோவி செழியன் 36 செகண்ட்ஸ்)

சிறப்புப் பிரிவினருக்கான கலந்தாய்வு வரும் 7ஆம் தேதி தொடங்கும் என்று கூறிய திரு. கோவி. செழியன், அரசு பள்ளி மாணவர்களுக்கான 7 புள்ளி ஐந்து சதவீத ஒதுக்கீட்டின் கீழ், மாணவர் சேர்க்கை பெறுவதற்கு 47 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>>>

தென்மேற்குப் பருவமழை பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா மாநிலங்களில் தீவிரமடைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த நான்கு நாட்களில் இது மேலும் தீவிரமடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா, உத்ராகண்ட், குஜராத் மாநிலங்களில் நாளை கன முதல் மிககனமழை வரை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி, ஹிமாச்சலப்பிரதேசம், கர்நாடகா, தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்துவரும் கனமழை காரணமாக, கர்நாடக அணைகளிலிருந்து காவிரியில் திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 85 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் தமிழகத்தின் ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் பைட் - தண்டபாணி 45 செகண்ட்ஸ்)

<<<<<<<<>>>>>>>>>

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹரிகரன் - ரூபன்குமார் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-10, 21-17 என்ற செட்கணக்கில் கனடாவின் **Jonathan Bing – Nyl Yakura** இணையை வென்றது.

<<<<<<<<>>>>>>>>>

துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றது.

இப்போட்டியின் மகளிர் 55 கிலோ எடைப்பிரிவில் புஷ்பாவும், 72 கிலோ எடைப்பிரிவில் ஹர்ஷிதாவும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் பிரிவு 55 கிலோ எடைப்பிரிவில் அனில் மோர்-ம், 63 கிலோ எடைப்பிரிவில் சேட்டனும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

50 கிலோ எடைப்பிரிவில் நீலம் வெண்கலப்பதக்கம் வென்றார்.

<<<<<<<<>>>>>>>>